# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032
தொலைபேசி எண்: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

முன்னிலை : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண். 72/ந/2025, நாள் 06.08.2025**

திரு. C. ஹரிபாபு
மிட்டணமல்லி, ஆவடி, சென்னை. – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர், பள்ளிபாளையம் நகராட்சி,
நாமக்கல் மாவட்டம். – எதிர்மனுதாரர்

சென்னை, ஆவடி, மிட்டணமல்லி, ஹை ஸ்கூல் தெரு, கதவு எண்.21 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. C. ஹரிபாபு என்பவரின் 23.12.2024 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 24.12.2024 அன்று பெறப்பட்டு, 72/ந/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

சென்னை, ஆவடி, மிட்டணமல்லி, ஹை ஸ்கூல் தெரு, கதவு எண்.21 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. C. ஹரிபாபு என்பவர் 23.12.2024 நாளிட்ட மனுவில் கீழ்க்கண்டவாறு புகார் தெரிவித்துள்ளார்:

"பள்ளிபாளையம் நகராட்சியில் முன்னாள் பணிபுரிந்த பி. நிர்மலாதேவி, நகரமைப்பு ஆய்வாளர் பதவிக்கு வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் மாற்றுத்திறனாளி முன்னுரிமை சலுகை பட்டியல் அடிப்படையில் சட்டத்திற்கு புறம்பாக பணி நியமனம் முறைகேடாக செய்யப்பட்டுள்ளது. தற்போது சேலம் மாநகராட்சியில் உதவி செயற்பொறியாளராக பி. நிர்மலா தேவி பணிப்புரிந்து வருகிறார். அவரை நேரில் அழைத்து விசாரணை செய்யுமாறும் மற்றும் பள்ளிபாளையம் நகராட்சியில் பி. நிர்மலா தேவி சம்பந்தமாக பணி அமர்த்தப்பட்ட உத்தரவு கோப்புகளை பள்ளிபாளையம் நகராட்சி ஆணையர் அவர்களை அழைத்து நேரடி விசாரணை செய்ய உத்தரவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பள்ளிபாளையம் நகராட்சியில் பணிபுரிந்த முன்னாள் நகரமைப்பு ஆய்வாளர் திருமதி. பி. நிர்மலாதேவி அவர்கள் புதிதாக தோற்றுவிக்கப்பட்ட நகரமைப்பு ஆய்வாளர் பதவிக்கு 12.07.2013 பணியில் பணி நியமன உத்தரவு சட்டத்திற்கு புறம்பாக பணியில் அமர்த்தப்பட்டுள்ளார்கள்.

மாற்றுத் திறனாளிகளுக்கு கிடைக்க வேண்டிய நியாயமான சலுகை பட்டியல் பணியை சட்டத்திற்கு புறம்பாக தொடர்ந்து பணியாற்றி வருகிறார். சேலம் மாநகராட்சி நகரமைப்பு பிரிவில் இவருடைய பணி உத்தரவு ஆணைகள் பள்ளிபாளையம் நகராட்சியில் கோப்புகள் இருக்கின்றன. பி. நிர்மலா தேவி அவர்கள் மாற்றுத்திறனாளி அடிப்படையில் பணியில் சேர்ந்துள்ளதாக கை கால் ஊனமுடைய மாற்றுத்திறனாளி என்று கூறப்பட்டுள்ளது. இவர் எத்தனை சதவீதம் ஊனமுற்றவர் பணி நியமனம் செய்யும்போது இவருக்கு வழங்கிய மருத்துவ குறிப்பில் எத்தனை சதவீதம் ஊனமுற்றவர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மற்றும் மாற்றுத்திறனாளிகள் துறையில் இருந்து இவருக்கு அடையாள அட்டை மாற்றத்திறனாளி என்று ஏதேனும் வழங்கப்பட்டது குறித்து கோப்புகளை நேரடியாக பள்ளிபாளையம் நகராட்சி ஆணையர் அவர்களை அழைத்து நேரடி விசாரணை செய்யுமாறும் சட்டத்திற்கு புறம்பாக மாற்றுத்திறனாளி என்று அரசு பணியாளர்கள் விதிகள்படி மறைத்து மோசடி செய்து நபருக்கு பி. நிர்மலாதேவி அவர்களுக்கு சட்டத்திற்கு புறம்பாக நகரமைப்பு ஆய்வாளர் பணியில் இருந்து பதவி உயர்வு பெற்று உதவி செயற் பொறியாளர் பதவிக்கு பதவி உயர்வு வழங்கும் போது நகராட்சி நிர்வாக கூடுதல் இயக்குநர் திரு. விஜயகுமார் அவர்கள் இந்த குற்றத்தை தவறுகள் எனத் தெரிந்தும் பி. நிர்மலா தேவி அவர்களுக்கு அவர்களிடம் லஞ்சத்தை வாங்கிக்கெண்டு பதவி உயர்வு வழங்கியுள்ளார். பி. நிர்மலா தேவி நகரமைப்பு அதிகாரியை பணியிட நீக்கம் செய்யுமாறு உள்ளாட்சி முறை

மாமன்றம் நடுவம் மூலம் விசாரணை செய்து நடவடிக்கை எடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.'' என தெரிவித்துள்ளார்.

2. மனுதாரரது புகார் குறித்து பள்ளிபாளையம் நகராட்சி ஆணையரிடம் இம்முறைமன்ற நடுவத்தின் 13.03.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் அறிக்கை கோரப்பட்டது.

3. பள்ளிபாளையம் நகராட்சி ஆணையர், தனது 25.03.2025 நாளிட்ட கடிதம் ந.க.எண்.23/2022/சி1–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்துள்ளார்.

"நாமக்கல் மாவட்டம், பள்ளிபாளையம் நகராட்சி, அரசு ஆணை எண்.30, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.13.02.2013–இல் தமிழ்நாடு நகராட்சி நகரமைப்பு பணி விதிகள், 1970–ன்படி நகரமைப்பு பிரிவில் ஒரு நகரமைப்பு ஆய்வர் (Town Planning Inspector) பணியிடம் ஒன்று புதியதாக தோற்றுவிக்க ஆணையிடப்பட்டது. மேற்படி புதியதாக தோற்றுவிக்கப்பட்ட நகரமைப்பு ஆய்வர் பணியிடத்தை பூர்த்தி செய்து கொள்ள வேண்டி உரிய அரசு விதிகளின் படி அரசு பணியிலிருந்து விடுவிக்கப்பட்டவர்கள் மற்றும் சிறப்பு பதிவேட்டில் உள்ள தகுதியான நபர்களின் பட்டியல் அனுப்பக்கோரி அரசு செயலாளர், தொழில்துறை, எலெக்டரானிக்ஸ் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா லிமிடெட் (ELCOT) இயக்குநர், மக்கள் தொகை கணக்கெடுப்பு துறை மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், நாமக்கல் ஆகிய துறைகளுக்கு கடிதம் அனுப்பப்பட்டது.

மேற்படி பணியிடத்தில் தகுதியான நபர்கள் எவரும் இல்லாததால் பொதுப்போட்டி முன்னுரிமை பட்டியலில் உள்ளவர்களைக் கொண்டு இப்பணியிடத்தை நிரப்பிட மேற்கண்ட பொதுப்போட்டி முன்னுரிமை பட்டியலில் தகுதி வாய்ந்த நபர்களின் பட்டியலை அனுப்பிவைக்குமாறு உதவி இயக்குநர், மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம், நாமக்கல் அவர்களுக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது. இதன்படி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், நாமக்கல் மூலம் பெறப்பட்ட பட்டியலின்படி 7– நபர்களுக்கு உரிய நேர்காணல் அழைப்பாணை அனுப்பி வைக்கப்பட்டது. நேர்காணலுக்கு 4 நபர்கள் கலந்து கொண்டதில் கல்வித் தகுதி, தொழில்நுட்ப தகுதி, ஜாதி சான்றிதழ் மற்றும் உடல் தகுதி ஆகியன பரிசீலனை செய்யப்பட்டு, தகுதியான நபரை தேர்வு செய்ய பள்ளிபாளையம் நகராட்சியால் நகர்மன்ற நியமனக் குழுவிற்கு வைக்கப்பட்டது.

நகர்மன்ற நியமனக் குழு தீர்மானம் எண்.3, நாள்.21.06.2013–ல் நகரமைப்பு ஆய்வர் பணி நியமனம் செய்ய ஒப்புதல் வழங்கிய திருமதி. பி. நிர்மலா தேவி என்பவர் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் பரிந்துரைக்கப்பட்ட பட்டியலின்படி தமிழ்நாடு நகராட்சி நகரமைப்பு பணி விதிகள் (Service Rule) - 1970, பிரிவு –3 இணைப்பு விதி–8–ன்படி நகரமைப்பு ஆய்வாளர் பணிக்கான Diplomo in Civil Engineering கல்வி தகுதி பெற்றிருந்ததன் அடிப்படையில் மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, நாமக்கல் வழங்கிய மாற்றுத் திறனாளிகளுக்கான சலுகைகள் பெற தகுதி உடையவர் என்பதற்கான அடையாள அட்டை எண். 32825, நாள்.15.04.2013–ஐ இணைத்துள்ளார். இவ்வாறான நிலையில் ஆணையாளர், பள்ளிபாளையம் நகராட்சி அவர்களின் செயல்முறைகள் ந.க.298/2013/அ1, நாள் 12.07.2013–ல் நகரமைப்பு ஆய்வாளர் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளார் என்ற விவரம் சமர்ப்பிக்கப்படுகிறது.'' என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரரையும், எதிர்மனுதாரான பள்ளிபாளையம் நகராட்சி ஆணையரையும் 30.04.2025 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெறவுள்ள விசாரணையில் கலந்து கொள்ளுமாறு 23.04.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன. மனுதாரர் திரு. C. ஹரிபாபு என்பவர் தனது 29.04.2025 நாளிட்ட மின்னஞ்சலில் தனக்கு உடல்நிலை சரியில்லாததால் விசாரணைக்கான தேதியினை அடுத்த மாதத்திற்கு மாற்றித் தருமாறு கேட்டுக்கொண்டதன் அடிப்படையில், மனுதாரரையும், எதிர்மனுதாரரான பள்ளிபாளையம் நகராட்சி ஆணையரையும் 26.06.2025 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெறவுள்ள விசாரணையில் கலந்து கொள்ளுமாறு 16.06.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் திரு. C. ஹரிபாபு என்பவர் 26.06.2025 அன்று இம்முறை மன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் கலந்து கொண்டு கீழ்கண்டவாறு தனது வாக்குமூலத்தை இம்முறைமன்ற நடுவத்தில் பதிவு செய்துள்ளார்.

"பள்ளிபாளையம் நகராட்சியில் முன்னாள் நகரமைப்பு ஆய்வாளராக பணிபுரிந்த பி. நிர்மலா தேவி என்பவர் வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் மாற்றுத்திறனாளி முன்னுரிமை சலுகை பட்டியல் அடிப்படையில் சட்டத்திற்கு புறம்பாக பணி நியமனம் செய்யப்பட்டுள்ளார். இவர் தற்போது சேலம் மாநகராட்சியில் உதவி செயற் பொறியாளராக பதவி உயர்வு பெற்று பணியாற்றி வருகின்றார்.

மாற்றுத்திறனாளி அடிப்படையில் பணியில் சேர்ந்துள்ள பி. நிர்மலா தேவி, கை, கால் ஊனமுடைய மாற்றுத்திறனாளி என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் இவர் கை, கால் ஊனமுடைய மாற்றுத்திறனாளி இல்லை

என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, பி.நிர்மலா தேவி என்பவரை பணிநியமனம் செய்யும் போது அவருக்கு வழங்கிய மருத்துவ சான்றில் எத்தனை சதவீதம் ஊனமுற்றவர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை தெரிவிக்க வேண்டுகின்றேன்.

மேலும், பி.நிர்மலா தேவி அவர்களை சட்டத்திற்கு புறம்பாக நகரமைப்பு ஆய்வாளர் பணியில் இருந்து உதவி செயற் பொறியாளர் பதவிக்கு நகராட்சி நிர்வாக கூடுதல் இயக்குநர் திரு. விஜயகுமார் அவர்கள் பதவி உயர்வு வழங்கியது தவறு எனவும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், நல்ல உடல் தகுதி பெற்றுள்ள பி. நிர்மலா தேவி என்பவர் மாற்றுத்திறனாளிக்கான முன்னுரிமை சலுகையில் நகரமைப்பு ஆய்வாளர் பணி நியமனம் செய்ததை ரத்து செய்ய வேண்டும் என்றும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

6. எதிர்மனுதாரரான பள்ளிபாளையம் நகராட்சி ஆணையரின் 23.06.2025 நாளிட்ட கடித எண்.23/ந/2022/சி1–ல் தனது சார்பாக பள்ளிபாளையம் நகராட்சியில் மேலாளராக பணிபுரியம் திருமதி. அ. வசந்தா என்பவரை 26.06.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெறவுள்ள விசாரணையில் அனுமதிக்குமாறு கேட்டுக்கெண்டதற்கிணங்க, நகராட்சி மேலாளர் 26.06.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் கலந்து கொண்டு கீழ்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"மனுதாரர் திரு C. ஹரிபாபு என்பவரின் புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள புகார் குறித்து தெரிவிப்பதாவது, பள்ளிபாளையம் நகராட்சியில், புதிதாக தோற்றுவிக்கப்பட்ட நகரமைப்பு ஆய்வாளர் பணியிடத்தை பூர்த்தி செய்ய அரசு விதிகளின்படி அரசு பணியிலிருந்து விடுவிக்கப்பட்டவர்கள் மற்றும் சிறப்பு பதிவேட்டில் உள்ள தகுதியான நபர்களின் பட்டியல் அனுப்பக்கோரி அரசு செயலாளர், தொழில்துறை, எலெட்க்ரானிக்ஸ் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா லிமிடெட் (ELCOT) இயக்குநர், மக்கள் தொகை கணக்கெடுப்பு துறை மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், நாமக்கல் ஆகியோருக்கு கடிதம் அனுப்பப்பட்டதில், மேற்படி நகரமைப்பு ஆய்வாளர் பணியிடத்திற்கு தகுதியான நபர்கள் எவரும் இல்லாததால் பொது போட்டி முன்னுரிமை பட்டியலில் உள்ளவர்களைக் கொண்டு இப்பணிடத்தை நிரப்பிட நாமக்கல் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் பெறப்பட்ட பட்டியலின்படி 7 நபர்களுக்கு உரிய நேர்காணல் அழைப்பாணை அனுப்பி வைக்கப்பட்டது. நேர்காணலுக்கு 4 நபர்கள் கலந்து கொண்டதில் கல்வித்தகுதி, தொழில்நுட்ப தகுதி, ஜாதி சான்றிதழ் மற்றும் உடல் தகுதி ஆகியவை பரிசீலனை செய்த பின்னர், தகுதியான நபரை தேர்வு செய்வதற்காக நேர்காணலில் கலந்து கொண்ட 4 பேர் கொண்ட பட்டியல் நியமனக்குழுவில் வைக்கப்பட்டது.

நகர்மன்ற நியமனக்குழு தீர்மானம் எண்.3, நாள்.21.06.2023–ல் வழி மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் பரிந்துரைக்கப்பட்ட பட்டியலில் இருந்து தமிழ்நாடு நகராட்சி நகரமைப்பு ஆய்வாளர் பணிக்கு திருமதி. பி. நிர்மலா தேவி என்பவர் Diplomo in Civil Engineering கல்வி தகுதி பெற்றிருந்ததாலும், நாமக்கல் மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நலத்துறை வழங்கிய மாற்றுத்திறனாளிகளுக்கான சலுகைகள் பெற தகுதி உடையவராக இருந்ததாலும் (அடையாள அட்டை எண்.32825, நாள்.15.04.2013 – 40% LD) ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டபின் திருமதி. பி. நிர்மாலா தேவி என்பவர் நகரமைப்பு ஆய்வாளராக பள்ளிபாளையம் நகராட்சியில் பணிநியமனம் செய்யப்பட்டுள்ளார். இதில் எந்த ஒரு முறைகேடும் நடைபெறவில்லை என்பதை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

7. மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலம், எதிர்மனுதாரரான பள்ளிபாளையம் நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் நகராட்சி ஆணையரின் சார்பாக விசரணையில் ஆஜரான பள்ளிபாளையம் நகராட்சி மேலாளர் அலுவலரின் வாக்குமூலம் மற்றும் இதர ஆவணங்கள் அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தினால் மிகக்கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

மனுதாரர் தனது மனு மற்றும் வாக்குமூலத்தில் பள்ளிபாளையம் நகராட்சியில் பணிப்புரிந்த முன்னாள் நகரமைப்பு ஆய்வாளர் திருமதி பி. நிர்மலாதேவி என்பவர் வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் மாற்றுத்திறனாளி முன்னுரிமை சலுகை பட்டியல் அடிப்படையில் சட்டத்திற்கு புறம்பாக பணி நியமனம் முறைகேடாக செய்யப்பட்டுள்ளதாகவும், மாற்றுத்திறனாளிகள் துறையில் இருந்து அவருக்கு வழங்கப்பட்ட அடையாள அட்டை, அதில் எத்தனை சதவீதம் ஊனமுற்றவர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது போன்ற விவரங்கள் குறித்து பள்ளிபாளையம் நகராட்சி ஆணையர் அவர்களை அழைத்து கோப்புகளைக்கொண்டு நேரடி விசாரணை மேற்கொண்டு பணி நியமனத்தை ரத்து செய்ய வேண்டும் என்றும் கோரியிருப்பது அறிய முடிகிறது.

பள்ளிபாளையம் நகராட்சியில் புதிதாக தோற்றுவிக்கப்பட்ட நகரமைப்பு ஆய்வாளர் பணியிடத்தை பூர்த்தி செய்ய அரசு விதிகளின்படி அரசு பணியிலிருந்து விடுவிக்கப்பட்டவர்கள் மற்றும் சிறப்பு பதிவேட்டில் உள்ள தகுதியான நபர்களின் பட்டியல் அனுப்பக்கோரி அரசு செயலாளர், தொழில்துறை, எலெட்க்ரானிக்ஸ் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா லிமிடெட் (ELCOT) இயக்குநர், மக்கள் தொகை கணக்கெடுப்பு துறை மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், நாமக்கல் ஆகியோருக்கு கடிதம் அனுப்பப்பட்டதில், தகுதியான நபர்கள் எவரும் இல்லாததால் பொது போட்டி முன்னுரிமை பட்டியலில் உள்ளவர்களைக் கொண்டு நகரமைப்பு ஆய்வாளர் பணிடத்தை நிரப்பிட நாமக்கல் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் பெறப்பட்ட பட்டியலின்படி 7 நபர்களுக்கு நேர்காணலுக்கான அழைப்பாணைகள் அனுப்பி வைக்கப்பட்டதும், நேர்காணலுக்கு 4 நபர்கள் கலந்து கொண்டதில் கல்வித்தகுதி, தொழில்நுட்ப தகுதி, ஜாதி சான்றிதழ் மற்றும் உடல் தகுதி ஆகியவை பரிசீலனை செய்து தகுதியான நபரை தேர்வு செய்வதற்காக நேர்காணலில் கலந்து கொண்டவர்களில் விவரத்தினை நியமனக்குழுவில் வைக்கப்பட்டு, நகரமைப்பு ஆய்வாளர் பணிக்கு திருமதி. பி. நிர்மலா தேவி என்பவர் Diplomo in Civil Engineering கல்வி தகுதி பெற்றிருந்ததாலும், நாமக்கல் மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நலத்துறை வழங்கிய மாற்றுத்திறனாளிகளுக்கான சலுகைகள் பெற தகுதி உடையவராக இருந்ததாலும் நகர்மன்ற நியமனக்குழு தீர்மானம் எண்.3, நாள்.21.06.2023–ல் வழி அன்னார் பணிநியமனம் செய்யப்பட்டுள்ளார் என்ற விவரம் பள்ளிபாளையம் ஆணையரின் அறிக்கை மற்றும் ஆணையரின் சார்பில் ஆஜரான நகராட்சி மேலாளரின் வாக்குமூலம் வாயிலாக அறியமுடிகிறது.

இந்நேர்வில், பள்ளிப்பாளையம் நகராட்சியில் நகரமைப்பு ஆய்வாளர் பணியிடத்தை நிரப்ப அரசு விதிகளின்படி நாமக்கல் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் பட்டியல் பெறப்பட்டு கல்வித்தகுதி, தொழில்நுட்ப தகுதி, ஜாதி சான்றிதழ் மற்றும் உடல் தகுதி ஆகியவற்றுக்கான ஆவணங்களை பரிசீலனை செய்து தகுதியான நபரை நகர்மன்ற நியமனக்குழு மூலம் பணிநியமனம் செய்யப்பட்டுள்ளதால், மனுதாரர் மாற்றுத்திறனாளிகளுக்கான சலுகைகள் பெற தகுதி உடையவராக (அடையாள அட்டை எண்.32825, நாள்.15.04.2013 – 40% LD) இருந்ததாலும், பள்ளிபாளையம் நகராட்சியில் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளதாக பள்ளிப்பாளையம் நகராட்சி மேலாளர் தெரிவித்துள்ளார். மனுதாரர் மாற்றுத்திறனாளிக்கான சான்றிதழின் மெய்த்தன்மை குறித்து கேள்வி எழுப்புவதால், இது சம்மந்தமாக மாற்றுத்திறனாளிகள் நலத்துறையை அணுகும்படி மனுதாரரை அறிவுறுத்தலாம் என முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு, ஆகஸ்ட் திங்கள் 6–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. C. ஹரிபாபு,
எண்.21, உயர்நிலைப் பள்ளி தெரு,
மிட்டனவல்லி, ஆவடி, சென்னை.

2) நகராட்சி ஆணையர்,
பள்ளிபாளையம் நகராட்சி, நாமக்கல் மாவட்டம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

4) இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி.

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

11/8/25
செயலாளர்

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் சென்னை–600 032
வாய்மையே வெல்லும்